**Spl.CC.No.80/2019**

**30-09-2021** ஆம் தேதி அன்று சாட்சி **P.W. 54 (**திருமதி**.**சண்முகபிரியா**)** அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.**

எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை

13.05.2006 முதல் 14.05.2011 ஆம் தேதி வரை எதிரி கோயமுத்தூர் கிழக்கு தொகுதி சட்ட மன்ற உறுப்பினராகவும் மற்றும் ஊரக தொழில் மற்றும் கால்நடை துறை அமைச்சராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். அக்டோபர் மாதம் 2006 லிருந்து 14.05.2011 வரை எதிரி தமிழக அரசின் அமைச்சராக பதவி வகித்து வந்தார். 13.05.2006 முதல் 14.05.2011 வரை எதிரி ஒரு பொது ஊழியர் (Public Servant) என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 13.06.2006 முதல் 31.03.2010 வரை மதிப்பீட்டு காலமாக (Check Period) எடுத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். எந்த வகையில் மதிப்பீட்டு காலத்தை நிர்ணயம் செய்தேன் என்றால், எதிரி சொத்துக்களை அதிகமாக வாங்கிய காலத்தை கொண்டு நிர்ணயம் செய்தேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு காலத்தை நிர்ணயித்தேன் என்றால், முதல் நிலை விசாரணையில் கிடைக்கபெற்ற தகவல்களின் அடிப்படையில் நிர்ணயித்தேன். முதல்நிலை விசாரணையில் கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் மதிப்பீட்டு காலத்தை நிர்ணயித்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். முகாந்திரம் ஏதும் இல்லாமல் மதிப்பீட்டு காலத்தை முடிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. மதிப்பீட்டு காலத்தில் தொடக்க காலத்தில் எதிரி வைத்திருந்த சொத்து ரூ. 1,66,52,950/- என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மதிப்பீட்டு காலத்தின் இறுதி காலத்தில் எதிரி ரூ. 2,40,17,152/- என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மதிப்பீட்டு காலத்தில் எதிரியின்

சட்டபடியான வருமானம் ரூ.59,70,312/- என குறிப்பிட்டு இருக்கிறேன். மதிப்பீட்டு காலத்தில் எதிரியின் சட்டபடியான செலவீனமாக ரூ.23,14,202/- என குறிப்பிட்டு இருக்கிறேன். மதிப்பீட்டு காலத்தில் எதிரி ஈட்டிய சொத்துக்களின் மதிப்பு ரூ.73,64,202/- என குறிப்பிட்டு இருக்கிறேன். மேற்படி ரூ.73,64,202/- எந்த எந்த ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்தேன் என்றால், எனது முதல் நிலை விசாரணையின் அடிப்படையில் முடிவு செய்தேன். முதல் நிலை விசாரணையில் என்ன என்ன ஆவணங்களை பார்த்தேன் என என்னால் சொல்லமுடியுமா என்றால், மேற்கண்ட கேள்விக்கு ஏற்கனவே பதில் அளித்துள்ளேன். எதிரி தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்யும் போது அளித்திருந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் மேற்படி தொகையை முடிவு செய்தேன். மதிப்பீட்டு காலத்தின் எதிரியின் சேமிப்பு ரூ. 36,56,110/- என குறிப்பிட்டுள்ளேன். வருமானத்திலிருந்து செலவினத்தை கழிக்கபெறும் தொகையை தான் likely savings என குறிப்பிட்டு உள்ளேன். மதிப்பீட்டு காலத்தில் எதிரி சேர்த்த சொத்தின் மதிப்பு ரூ.37,08,092/- என சொல்லியுள்ளேன். மேற்படி ரூ. 37,08,092/- என்பது மதிப்பீட்டு காலத்தின் சேமிப்பாக இருக்கவேண்டிய தொகையை விட அதிகமான சொத்தாக(in excess of likely savings during the check period) குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் மேற்படி தொகைகளை எப்படி முடிவு செய்தேன் என்பதற்கான தனித்தனியான விவரங்களை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது புலனாய்வின் முடிவில் தெரிவித்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக எதிரியை அழைத்து வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்திருப்பதாக எதிரிக்கு அறிவிப்பு செய்தேனா என்றால், முதல் நிலை விசாரணையின் போது செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள தொகைகள் ஆவணங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதா என்றால் ஆம். என்ன என்ன ஆவணங்கள் என்றால், எதிரி தேர்தல் ஆணையத்திற்கு சமர்ப்பித்த ஆவணங்களை கணக்கில் கொண்டேன். முதல் தகவல் அறிக்கையிற்கு பிறகு

அந்த ஆவணங்களை வாங்கி சரிபார்த்தேனா என்றால், ஆம் சரி பார்த்தேன். அவ்வாறு சரிபார்க்கும்போது எதிரி ரூ.37,08,092/- வருமானத்திற்கு அதிகமாக எதிரி சேர்த்துள்ளார் என்பது தெரியவந்ததா என்றால், அவ்வாறு சரிபார்க்கும்போது எனது புலன் விசாரணையின் முடிவில் ரூ.44,64,387.19 என தெரியவந்தது. மேற்படி ரூ.37,08,092/- என்ற தொகையிலிருந்து ரூ.44,64,387.19 என்ற அளவு தொகை எந்த ஆவணங்களின் அடிப்படையில் முடிவு செய்தேன் என்றால், எனது புலன் விசாரணையின் முடிவில் நான் கண்டுணர்ந்தேன். முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.12 ல் குறிப்பிட்டுள்ள ரூ. 1,66,52,950/-, ரூ.2,40,17,152/-, ரூ.59,70,312/-, ரூ.23,14,202/-, ரூ.73,64,202/-, ரூ.36,56,110/- , ரூ.37,08,092/- என மேலே குறிப்பிட்டுள்ள தொகைகள் எவ்வித ஆவணங்களின் அடிப்படை இல்லாமல் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்,13 ல் முதல் தகவல் அறிக்கை தகவல் தந்தவருக்கு/குற்றமுறையீட்டாளருக்கு படித்து காட்டி, அது சரியாக எழுதப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று அச்சிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் யார், யாருக்கு முதல் தகவல் அறிக்கை படித்து காண்பிக்கப்பட்டு அதன் நகல் கொடுக்கப்பட்டது என்றால், இந்த வழக்கின் புகார்தாரரே நான் தான். முதல் தகவல் அறிக்கையின் நகலை ஒன்றை நான் பெற்று கொண்டேனா என்றால், நான் தான் இவ்வழக்கில் புகார்தாரர். முதல் தகவல் அறிக்கை நகல் ஒன்றை தகவல் கொடுத்தவருக்கு கொடுத்தேனா என்றால், இவ்வழக்கில் நான் தான் புகார்தாரர் ஆவேன். வழக்கறிஞர் V. கிரினிவாசபிரசாத்திற்கு முதல் தகவல் அறிக்கையின் நகல் கொடுத்தேனா என்றால், அவர் கொடுத்த தகவலை நான் ஒரு தகவலாக மட்டுமே எடுத்துக்கொண்டேன். குற்ற விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 165(3) ன் படி இவ்வழக்கின் எனது புலன் விசாரணைக்கு உதவியாக இருக்கும் பொருட்டு திரு. அம்பிகாபதி, திரு.ராமசந்திரன், திரு. ரங்கராஜன், திரு. சந்திரமௌலி,

திரு. நாச்சியப்பன், திரு.முருகேசன். திரு. அலி பாட்ஷா ஆகியோர்களை துணை காவல் கண்கானிப்பாளர்களை சொத்துக்களை சோதனை செய்து ஆவணங்களை கைப்பற்ற அங்கீகார கடிதம் வழங்கினேனா என்றால், சோதனை மற்றும் கைப்பற்றுதல்(Search and Seizure) காரியங்களுக்காக மேற்கண்ட அதிகாரிகளுக்கு அங்கீகார கடிதம் அனுப்பினேன். மேற்படி அதிகாரிகளை இவ்வழக்கில் உதவியாக இருக்கவேண்டி யார் உத்தரவிட்டார்கள் என்றால், எனது வேண்டிலின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்கானிப்பு துறை தலைமையகத்திலிருந்து உத்தரவிட்டார்கள். மேற்படி அதிகாரிகள், மேலதிகாரிகளின் எழுத்துபூர்வமான உத்தரவின் பேரில் வந்தார்களா என்றால், ஆம். துணை காவல் கண்கானிப்பாளரின் சோதனை மற்றும் கைப்பற்றுதல் பணிக்காக சாட்சியாக இருக்கும் பொருட்டு இரண்டு அரசு அதிகாரிகளை ஒவ்வொரு துணை காவல் கண்கானிப்பாளருக்கும் அமர்த்தினேனா என்றால், ஆம், அமர்த்தினேன். அந்த சாட்சிகள் பணிபுரிந்து வரும் துறையின் மாவட்ட அளவிலான உயர் அதிகாரிகளுக்கு நான் வேண்டுகோள் கடிதம் அனுப்பியதன் பேரில், அந்த சாட்சிகளை துறை அதிகாரிகளை அனுப்பி வைத்தார்கள்.

<u>கேள்வி:</u> எந்த துறை அதிகாரிகளுக்கு நான் சாட்சிகளை அனுப்பும் படி கடிதம் அனுப்பினேன்?

<u>பதில்:</u> தோட்டகலைத்துறை கோவை மாவட்டம், வேளாண்துறை கோவை மாவட்டம், கால்நடை துறை கோவை மாவட்டம், பட்டுவளர்ச்சி துறை கோவை மாவட்டம், வட்டாட்ச்சியர் சூலூர் கோவை மாவட்டம், வட்டாட்ச்சியர் கோவை தெற்கு கோவை மாவட்டம், தலைமை பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் கோவை ஆகிய துறை தலைவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன்.

எந்த தேதியில் வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன் என்றால் 28.11.2011 ஆம் தேதியில் அனுப்பினேன். அந்த துறை அதிகாரிகள் எனக்கு சாட்சிகளை நியமனம் செய்து கடிதம் அனுப்பினார்களா என்றால், நான்

அனுப்பிய கடிதத்தை பெற்றுக்கொண்ட ஒப்புதலுடன் சாட்சிகளை நியமனம் செய்தும் கொடுத்தார்கள். சாட்சிகள் துறை அதிகாரிகள் வழங்கிய கடிதத்தை என்னிடம் காண்பித்தார்களா என்றால், துறை அதிகாரிகள் நியமனம் செய்து அனுப்பிவைத்தார்கள் என என்னிடம் அறிக்கை செய்தார்கள். துறை அதிகாரிகள் எனக்கு நியமித்த பெயர்களை வைத்து நான் அவர்களை சரிபார்த்துக்கொண்டேன். கு.வி.மு.ச.பிரிவு 165(3)-ன் கீழ் கொடுத்த அங்கீகார கடிதங்களில் அரசு சாட்சிகளின் பெயர்கள் குறிப்பிடவில்லையென்றால் சரிதான். ஏழு துணைக்காவல் கண்காணிப்பாளர்களிடம் அரசு சாட்சிகள் சோதனை மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கைகளுக்கு சாட்சிகளாக உடன் வருகிறார்கள் என கடிதங்கள் ஏதும் கொடுத்தேனா என்றால், இல்லை. சாட்சிகளிடம் சோதனை மற்றும் கைப்பற்றுதல் நடவடிக்கைகளுக்காக அரசு சாட்சிகள் செல்ல வேண்டுமென எழுத்துமூலமாக நான் அவர்களிடம் தெரிவித்தேனா என்றால், இல்லை. வாய்மொழியாக நான் தெரிவித்து அனுப்பிவைத்தேன். சாட்சிகளை நியமனம் செய்து துறை அதிகாரிகள் அனுப்பிய கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் அவைகள் அலுவலக தொடர்புகள் (Administrative communications) என்பதால் அவற்றை தாக்கல் செய்யவில்லை. குற்ற விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவு 100 மற்றும் 165-ன்படி சோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய பகுதியில் வசிக்கும் தனிப்பட்ட மதிப்புமிக்க நபர்களை சாட்சிகளாக வைத்துத்தான் சோதனை மேற்கொள்ள வேண்டும் என்றால், சரிதான். அரசு சாட்சிகளை கொண்டும் சோதனை மேற்கொள்ளலாம். அரசு சாட்சிகள் மதிப்புமிகு நபர்கள் ஆவார்கள். நான் சோதனையின் போது அனுப்பியதாக சொல்லும் சாட்சிகள் யாரும், சோதனையின் போது உடனிருக்கவில்லையென்றால், சரியல்ல. சோதனைப்பட்டியலில் சாட்சிகளிடம் எனது அலுவலகத்தில் வைத்து கையெழுத்து வாங்கியிருக்கிறேன் என்றால், சரியல்ல. குற்ற விசாரணை நடைமுறைச்சட்டம் பிரிவுகள் 100 மற்றும் 165 ஆகிய பிரிவுகளின் வகையங்களில் சொல்லப்பட்டிருக்கும் முறைப்படி இவ்வழக்கில் சோதனை

மேற்கொள்ளப்படவில்லையென்பதால், இவ்வழக்கின் சோதனை (Search) என்பது சட்டத்திற்கு முரணானது என்றால், சரியல்ல. சட்டப்படிதான் இவ்வழக்கின் சோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

<u>கேள்வி</u> - சோதனை மேற்கொள்ள வேண்டி நான் அங்கீகாரம் அளித்து அனுப்பிய ஏழு துணைக்காவல் கண்காணிப்பாளர்கள் அவர்கள் மேற்கொண்ட சோதனை பகுதியில் வசிக்கும் மதிப்புமிக்க தனி நபர்களை சாட்சியாக அழைத்ததாகவோ, சாட்சிகள் வர மறுத்ததாகவோ எனது விசாரணையில் துணைக்காவல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளார்களா?

<u>பதில்</u> - இல்லை.

**(**இருதரப்பு வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக நாளை **(01-10-2021)** ஆம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது**).**

ஒம்/சண்முகபிரியா,

ஒம்/ஆர்.சக்திவேல்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்.